OS No.34/2015, நாள்: 03.03.2020

<u>வா.சா.1 ___ அரியபூபதி ஆஜர், குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.23ல் ராமச்சந்திரன் என்ற பெயரில்தான் ரசீது எழுதப்பட்டுள்ளது என்றால் அது செலுத்தியவர் பெயர் தவறாக எழுதப்பட்டுள்ளது அறுமுக கவுண்டருக்குதான் அது செலுத்தப்பட்டது. நான் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.23ல் எந்த ஆண்டு வரையிலான குத்தகை தொகையை என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோல் அது எந்த சர்வே எண்ணிற்கு எந்த கிராம நிலத்திலுள்ள புல எண்ணிற்கு செலுத்தப்பட்டதாக காணப்படுகிறதா என்றால் இல்லை. வா.சா.ஆ.23-க்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதே வா.சா.ஆ.23 இணைக்கப்பட்டுள்ள ஜெராக்ஸ் நகலிலும் எந்த விவரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த ஜெராக்ஸ் நகலும் இந்த வழக்கிற்கு தொடர்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.26லும் எந்த விவரமும் குறிப்பிடப்படவில்லை என்றும், அது வழக்கிற்கும் ஆவணத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எந்த உத்தரவின்பேரில் குத்தகையை கருவூலத்தில் செலுத்தப்பட்டது என்பதற்கு உத்தரவினை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை மற்ற வழக்குகளில் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது பொய்யானது என்றும் மற்ற வழக்குகளிலும் தாக்கல் செய்யவில்லை என்றும், நான் குத்தகைதாரர் அல்ல என்பதால் தான் அந்த உத்தரவினை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.11ல் குறிப்பிட்டுள்ள பட்டா எண்.249க்கும் இவ்வழக்கு சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.16 முதல் வா.சா.ஆ.20 மற்றும் வா.சா.ஆ.22ல் குறிப்பிட்டுள்ள பட்டா எண்கள்.35 மற்றும் 328 ஆகியவை எந்த புல எண்ணிற்குரியவை என்றால் புல

எண்.88-க்குரியது. வா.சா.ஆ.18 மற்றும் வா.சா.ஆ.21ல் எந்த கிராமத்தில் உள்ள சொத்திற்கு செலுத்தப்பட்டது என்றும், பட்டா எண்ணும் குறிப்பிடப்படவில்லை என்றால் அதில் புல எண் குறிப்பிடப்பட்டுள்ளது. அது மண்வள பாதுகாப்பிற்காக செலுததப்பட்ட தொகையாகும். அது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றும் வழக்கிலோ முதல் விசாரணையிலோ அதுப்பற்றி கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. வரி ரசீதுகள் வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.22 வரையில் காலம் எண்.1ல் குத்தகைதாரர் என்று எதிலும் குறிப்பிடவில்லை என்றால் அவ்வாறு குறிப்பிடப்படுவதில்லை. 1977ம் ஆண்டுக்குரிய தீர்ப்புரை மேற்படி அசல் வழக்கு எண்.345/1975ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புக்கு பின்னிட்டு வாதி ஆறுமுக கவுண்டர் சேலம் தனித்துறை ஆட்சியரிடம் தன்னை பசலி எண்.1391 முதல் 1403 வரை குத்தகைதாரராக பதிவு செய்யவேண்டும் என்று தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான் அந்த உத்தரவு ஜெராக்ஸ் நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். அசல் வழக்கு எண்.461/1985ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீட்டு எண்.59/1994-ஐ தாக்கல் செய்ததால் மேற்படி மனுவில் ஆஜராகவில்லை அதனால் தள்ளுபடி செய்யப்பட்டது. நான் கூறுவது தவறானது என்றும் தள்ளுபடி செய்யப்பட்ட மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வாதி மனு தாக்கல் செய்தார் என்றும், அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவு பி.வா.சா.ஆ.2 ஆகும். நான் வழக்கில் எந்த புல எண்ணை குறிப்பிட்டுள்ளேன் என்றால் புல எண்.241ஐ குறிப்பிட்டுள்ளேன். அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1.75 ஹெக்டர் ஆகும். அதில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் புல எண்.241/2ல் உள்ள 3.78 ஏக்கர் நிலத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது புல எண்.241/1 மற்றும் புல எண்.241/3 ஆகியவை சாலைக்காக உட்பிரிவு

செய்யப்பட்டுள்ளன. புல எண்.241/1 0.05.0 ஹெக்டர்ஸ் மற்றும் புலஎண்.241/3 0.17.0 ஹெக்டர்ஸ் என்றால் சரிதான். அவை இரண்டு தார்சாலையாக உள்ளன என்றால் சரிதான். புல எண்.241/1 புளியம்பட்டியிலிருந்து திப்பனூர் செல்லும் சாலையாக உள்ளது. புல எண்.241/3 போச்சம்பள்ளியிலிருந்து அத்திகானூர் செல்லும் சாலையாக உள்ளது. எவ்வளவு நாட்களாக அங்கு உட்பிரிவு செய்யப்பட்டு சாலையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சுமார் 50 ஆண்டுகளாக இருக்கும். எந்த ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டது தெரியுமா என்றால் ஞாபகமில்லை. மேல்முறையீடு தாக்கல் செய்தபோது புல எண் உட்பிரிவு செய்யப்பட்டிருந்ததா என்றால் செய்யப்பட்டிருந்தது. மேல்முறையீடு தீர்ப்பில் உட்பிரிவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 அடங்கல் கணக்கு பதிவேட்டு நகலில் புல எண்.241/1 மற்றும் 241/3 ஆகியவை என்ன பயிர்செய்துள்ளதாக காணப்படுகிறது என்றால் பூஸ்திதி ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய வழக்கிலோ முதல் விசாரணையிலோ புலஎண்.241 உட்பிரிவு செய்யப்பட்டதாக கூறியிருக்கிறேனா என்றால் கூறவில்லை. வழக்கு சொத்தை நான் எப்போது அனுபவிக்கவில்லை என்றும், வாதி குத்தகைதாரர் இல்லாததால்தான் அந்த விவரங்களை குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. புல எண்.241/1 மற்றும் 241/3 ஆகியவை சாலையாக பயன்படுத்தி வரும் நிலையில் வாதி குத்தகைதாரராக இல்லாததால்தான் அதில் பயிர்செய்து வருவதாக தவறாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. புல எண்.241/2ல் வாதி எப்போதும் பயர்செய்யவில்லை என்றும் சுவாதீனத்தில் இல்லை என்றும் நிரந்தர குத்தகைதாரர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.552/1985ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதா என்றால்

மேல்முறையீட்டு வழக்கு எண்.59/1994 ஆகும். அசல் வழக்கு எண்.379/1989-ஐ வாதி எதற்காக தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.684/1983 வாதி ஆறுமுக கவுண்டா எதற்காக தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. அசல் வழக்கு எண்.552/1985 எதற்காக தாக்கல் செய்தார் என்றால் தான்தான் குத்தகைதாரர் என்றும் பிரதிவாதி இடையூறு செய்வதாக தாக்கல் செய்ததாக போட்டிருந்தார். அந்த வழக்கை எந்த காலத்திற்கான குத்தகைதாரரை இடையூறு செய்ததாக தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியாது. வாதி வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இல்லை பயிர் செய்யவில்லை குத்தகைதாரர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிதான் அனுபவத்தில் இருந்து பயிர்செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கந்தாயம் செலுத்தியதாக கூறுவதும் குத்தகைதாராக செலுத்தியதாக கூறுவதும் தவறானது என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் தமிழ்நாடு குத்தகைதாரர் சட்டம் பிரிவு 8-ன்படி பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரராக கூறுவது தவறானது என்று சொன்னால் சரியல்ல. அந்த சட்டப்படி உரிமையியல் நீதிமன்றத்தில் எந்த பரிகாரமும் பெற அருகதையல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியை அழைக்கழிக்கும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.